2006 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; விரைவில் அதற்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வணிக வரித் துறை, நம்முடைய அரசினுடைய வருமானத்தின் பெரும் பங்கை ஈட்டிக் கொடுக்கிற துறையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே பார்க்கிறபோது, பெரும்பாலான வணிக வரித் துறை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அவற்றிற்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இன்றைக்கு அரசுக் கட்டடங்கள் 69–ல் 220 அலுவலகங்கள் செயலாற்றிக்கொண்டிருக்கின்றன. அதேபோல தனியார் கட்டடங்கள் 186–ல் 267 அலுவலகங்கள் செயல்படுகின்றன. விரைவிலே ஒவ்வொன்றாக அவற்றை அரசுக் கட்டடங்களில் மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

139—

தார்ச் சாலை

***1361—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றிய வனப் பகுதி காவலூரில் இருந்து மந்தாரக்குட்டை வரையில் உள்ள வனச் சாலையைப் புதுப்பித்து, தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[2006 செப்டம்பர் 1

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றிய வனப் பகுதியில் காவலூரில் இருந்து மந்தாரக்குட்டை வரை சாலைகளைப் புதுப்பிக்கவும், தார்ச் சாலையாக மாற்றித் தரவும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் இருக்கக்கூடிய காவலூர் to மந்தாரக்குட்டை road என்பது மிகவும் மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அங்கு மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் பிரசவத்திற்கு வருவது என்றாலுங்கூட அவர்களுக்குப் பாதை இல்லை. அடிக்கடி அங்கே 12 யானைகள், 13 யானைகள் என்று நிலங்களுக்கு உள்ளே நுழைந்து, பயிர்களை நாசம் செய்கிறபோது, இவர்கள் தப்பி ஓடுவதற்குக்கூட சரியான வழியில்லாத ஒரு காலக்கட்டம். இந்தப் பாதையை உடனே எடுக்க வேண்டுமென்று அதற்கான முன்மொழிவுகள் எல்லாம் அனுப்பப்பட்டு, திருச்சியிலே வனத் துறையிடம் இருக்கக்கூடிய பொறியாளர் அலுவலகத்திலே அந்தக் கோப்பு நிலுவையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, தங்கள் வனத் துறையில் இருக்கக்கூடிய அந்தப் பொறியியல் துறைக்கு அறிவுரை வழங்கி, உடனடியாக இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றிய ஜவ்வாது மலை வனப் பகுதியில், inner பகுதியிலே அந்தக் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை செல்லுகின்ற சாலை 6.5 கிலோ மீட்டர் நீளமுள்ளது. அது 2005–2006 ஆம் ஆண்டு, வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ், சாலையோரத்திலே ஒர வடிகால் அமைக்கப்பட்டு, அதிலே வெட்டி எடுக்கப்பட்ட மண் சாலையிலே போடப்பட்டிருக்கிறது. அதன் பின்னாலே P.M.G.S.Y.—பிரதம அமைச்சர் கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், போளூர்-ஜமுனாமுத்தூர்-ஆலங்காயம் சாலை 51/6–லிருந்து ஜரபெண்டா வரை 8 கிலோ மீட்டர் தூரம் உள்ளது; 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் அதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு,

2006 செப்டம்பர் 1]

அதிலே அந்தக் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை செல்லுகின்ற சாலையும் அடங்கும். ஏனோ சென்ற ஆண்டு அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த ஆண்டு அந்தப் பணியை எடுப்பதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த நிதியை இந்த ஆண்டு வனத் துறைக்கு ஒதுக்கச் சொல்லி, வனத் துறையின்மூலமாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மலிங்கம். (குறுக்கீடு) உட்காருங்கள், ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இன்னொரு கேள்வி இருக்கிறதே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தர்மலிங்கம். கொஞ்சம் உட்காருங்கள். திரு. ஞானசேகரன், உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டார் இல்லையா? (குறுக்கீடு) சரி.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது, ஏற்கெனவே பாரதப் பிரதமர் சாலைத் திட்டத்திலே இந்தப் பணி எடுக்கப்படுவதாக இருந்தது என்று சொன்னார்கள். அதற்கான ஆய்வுகள் எல்லாம் நடத்தப்பட்டன. அது ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக நிறைவேற்றப்பட இருந்த காலத்தில், உடனடியாக Highways--நெடுஞ்சாலைத் துறை இந்தப் பணிகளையெல்லாம் எடுக்க வேண்டும் என்று ஓர் அரசாணை அரசால் பிறப்பிக்கப்பட்டு அது வேறு திசை மாறிப் போன காரணத்தினாலே, அந்த ஆண்டு அதை எடுக்க முடியாமல் போய்விட்டது. ஆகவே, நான் வனத் துறை அமைச்சர் அவர்களையும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம், அது ஒரு மலைப் பாதை என்கிற காரணத்தினாலே, இந்த ஆண்டு பாரதப் பிரதமர் சாலைத் திட்டத்திலிருந்து அந்தச் சாலைக்கு வரக்கூடிய பணத்தில், அதற்கு முன்னுரிமை அளித்து, அந்தப் பணியை நம்முடைய வனத் துறை, பொறியியல் துறையோடும், அதேபோல நம்முடைய ஊரக வளர்ச்சியினுடைய பொறியாளர்களை வைத்தும் இந்த ஆண்டே இரண்டு துறைகளும் ஒன்றாக இணைந்து, அதைச் செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, வேண்டியவை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

திரு. எல்.பி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சத்தியமங்கலம் தொகுதியிலே மாக்கம்பாளையம், குண்ரி என்று இரண்டு ஊராட்சிகள் உள்ளன. சுதந்திரம் அடைந்து சுமார் 60 ஆண்டுகள் ஆகியும், அங்கு தார்ச் சாலைகள் அமைக்கப்படவில்லை. அந்தப் பகுதிகளுக்கு கலைஞர் அரசால் தார்ச் சாலைகள் அமைக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியிலே உள்ள குத்தியலத்தூர், மாக்கம்பாளையம், குண்ரி, திங்களூர், கேர்மாலம் ஆகிய ஊராட்சிகளுக்குச் செல்வதற்கு, இரண்டு வனச் சோதனைச் சாவடிகள் உள்ளன. அங்கு கடந்த கலைஞர் ஆட்சியிலே, 1997 ஆம் ஆண்டு, அரசாணை நிலை எண் 126–ல், அவர்கள் பூமியில் விளைகின்ற விளைபொருட்களைக் கொண்டு செல்ல போக்குவரத்துக்கு ஏதுவாக, கட்டணமின்றிச் சென்று வர ஆணை பிறப்பித்தும், இன்று வரை அந்த அரசாணை நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. சுமார் 50,000 மக்கள் அந்தப் பகுதியிலே வாழ்கின்றார்கள். அவர்களுக்கு நமது கலைஞர் அரசு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. எல்.பி. தர்மலிங்கம்: நிவாரணம் செய்து கொடுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.